12.02.2026

OS No: 316/2019

பி.வா.சா. 1 - நாச்சம்மாள் க/பெ. அவையன்

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. பிவாசாஆ.1 எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. ஆவணத்தை படித்து காட்டினால் பதில் சொல்ல முடியும். 31.07.1989ம் தேதிய நில ஒப்படைப்பு உத்தரவு ஆவணம் பிவாசாஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அப்படி ஒரு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிவாசாஆ.1 ஆவணத்தில் என்ன சொத்து விவரம் சொல்லப்பட்டுள்ளது, அதன் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. பிவாசாஆ.1 ஆவணமானது யார் என்னிடம் கொடுத்தது என்றால் ராவுத்தர் கொடுத்தார். ராவுத்தர் என்பவருக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் உள்ளது, எனக்கு அது குறித்து தெரியவில்லை. ராவுத்தரை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கவுள்ளோமா என்றால் இல்லை, அவர் இறந்துவிட்டார். ராவுத்தருக்கு பிள்ளைகள் உள்ளார்களா என்றால் 2 பெண் பிள்ளைகள் உள்ளனர், அவர்கள் இருவரும் இங்கு இல்லை திருமணம் முடித்து வெளிநாட்டில் உள்ளார்கள். நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ,2 ஆவணம் நான் வாங்கிய கிரைய பத்திரமா என்றால் இதை போல் பத்திரங்கள் நிறைய உள்ளது என்பதால் எனக்கு அது குறித்து தெரியவில்லை. எத்தனை பத்திரங்கள் என்னிடம் உள்ளது என்றால் 3 பத்திரங்கள் உள்ளது. நான் வாங்கியதாக சொல்லும் கிரைய பத்திரம் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்றால் அப்போதைய ரூபாய் 35 க்கு வாங்கினோம். பிவாசாஆ,2 ஆவணம் யார் பெயரில் எவ்வளவு நாட்களுக்கு முன் வாங்கப்பட்டது என்றால் 20 வருடங்களுக்கு முன்பு நாச்சம்மாள் ஆகிய என் பெயருக்கு வாங்கப்பட்டது. பிவாசாஆ,2 ஆவணம் வாங்கப்பட்ட போது எனக்கு 35 வயது இருக்குமா என்றால் சரியல்ல, 45 வயது இருக்கும். பிவாசாஆ,2 ஆவணம் எந்த விற்பனையாளரின் பெயரில் வாங்கப்பட்டது என்றால் தற்போது ஞாபகமில்லை. பிவாசாஆ,2 ஆவணம் அசல் வீட்டில் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. பத்திரத்திற்கான வாசகம் யார் சொன்னது என்றால் நாங்கள் எங்களுடைய பெயரை சொன்னோம். அவர்கள் அவர்களுடைய பூமியை குறிப்பிட்டு பத்திரத்தை எழுதி கொடுத்தார்கள். பிவாசாஆ,2 ஆவணத்தை யார் எழுதியது என்றால் கணக்குபிள்ளை எழுதினார், அவர் பெயர் தெரியாது. அவர் தற்போது உயிருடன் இல்லை. பிவாசாஆ,2 கிரைய ஆவணத்தை எத்தனை பேர் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் 5 பேர் செய்தார்கள். 5 நபர்களில் 4 பேர் சிங்கம்புணரியை சேர்ந்தவர்கள், ஒருவர் தேத்திப்பட்டியை சேர்ந்தவர். சாட்சிகளான 5 நபர்களின் பெயர் தெரியுமா என்றால்

பெயர் தெரியாது, 4 பேர் இறந்துவிட்டார்கள். பிவாசாஆ,2 ஆவணத்தின் பக்கம் 4ல் **மேற்படி சொத்துக்கு பின்னீடு காலத்தில் தங்களது சொந்த செலவில் கிரைய பத்திரம் எழுதி Register Office மூலம் பதிவு செய்து தரும்படி கூப்பிடும் சமயம் எவ்வித எதிர்வாதம் மன்னியில் மேற்படி பத்திரத்தை தங்கள் பெயருக்கு பதிவு செய்து கொடுப்போமாகவும்** என கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிவாசாஆ,2 ஆவணத்தில் 2 ஏக்கர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு அவையன் தவிர மற்றொரு மகன் உள்ளார், அவர் பெயர் என்ன என்றால் கண்ணன் ஆவார். கண்ணன் 45 வயதில் 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். மேற்படி கண்ணனுக்கு திருமணமாகி மனைவி உள்ளாரா என்றால் உள்ளார், அவர் பெயர் ஒய்யம்மாள். மேற்படி கண்ணனுக்கு குழந்தைகள் உள்ளனரா என்றால் 1 பெண் 2 ஆண் குழந்தைகள் இருக்கிறார்கள். பிவாசாஆ.3 ஆவணத்தில் 2 ரசீதுகள் பி மெமோ என குறிப்பிட்டு நாகூர்கனி சிங்கம்புணரி என உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தற்போது நான் இருக்கும் வீட்டிற்கு கதவு எண் என்ன என்றால் எனது வீட்டிற்கு கதவு கிடையாது, கதவு எண் கிடையாது. பிவாசாஆ.3 ஆவணம் தாவா சொத்திற்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 2026 வாக்காளர் பட்டியலில் பக்கம் 6ல் எனது கணவர், நான், எனது மகன் மற்றும் எனது மருமகள் ஆகியோர் புகைப்படம், முகவரி வரிசை எண். 111 முதல் 114 வரை உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் பக்கம் 13ல் வரிசை எண். 296ல் சந்திரலேகா என்பவர் எனது மகனின் மனைவி என்று சொன்னால் சரிதான். பிவாசாஆ4 மற்றும் பிவாசாஆ5 என்னுடைய ஆவணம் என்றால் சரிதான். பிவாசாஆ6 ல் உள்ளது எனது கணவர் என்றால் சரிதான். நான் பள்ளி படிப்பு படித்துள்ளேனா என்றால் இல்லை. பிவாசாஆ,7 ஆவணத்தில் கண்ட ரசீதுகளில் எனது பெயர் குறிப்பிடப்பட்டு சோனாபுரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சோனாபுரம் எனது ஊரில் இருந்து எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் 6 மைல் துாரத்தில் உள்ளது. முருகேசன் என்பவர் தேங்காய் குடோன் வைத்துள்ளாரா என்றால் முருகேசன் என்பவரையும் தெரியாது. அவர் தேங்காய் குடோன் வைத்திருந்தாரா என்பதும் தெரியாது. பிவாசாஆ,7 ஆவணத்தில் ரசீதுகளில் கண்ட விவரங்கள் சரியா என்றால் அது எனக்கு தெரியாது. வாசாஆ,1 பத்திரத்தில் பக்கம் 11 புகைப்படத்தில் கண்ட நபர்கள் யார் என்றால் 2 புகைப்படங்களில் மாணிக்கம் என்பவர் உள்ளார், 1 புகைப்படத்தில் எனது மருமகள் சந்திரலேகா உள்ளார். வா.சா.ஆ.1 பத்திரத்தில் பக்கம் 4ல் 181/8, 181/10, 181/12 ஆகிய சர்வே எண்களில் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் சரியா என்றால் அது எழுதி கொடுத்தவர்களுக்கு சரியாக இருக்கலாம் எனக்கு அது சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தில் கண்ட சொத்திற்கு மேற்கே கண்ணன் மனைவி ஒய்யம்மாளுக்குரிய

சொத்து உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரமானது செல்லாது என சொல்லியுள்ளேனா என்றால் செல்லாது என்பதாகதான் வழக்கு போட்டுள்ளேன். மாணிக்கம் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய அரசிடம் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் அரசிடம் நடவடிக்கை எடுத்து தான் தாவா வழக்கு போட்டுள்ளேன். மேற்படி பட்டாவை ரத்து செய்ய உரிய அலுவலரிடம் மனு கொடுத்து நடவடிக்கை நான் எடுக்கவில்லை என்பதால் தாவா வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஒய்யம்மாள் பெயரிலான பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை, பக்கத்து இடத்தை அவர்கள் வாங்கியதால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒய்யம்மாள் மேற்படி இடத்தை கிரையமாக வாங்கினாரா என்றால் ஆமாம். மேற்படி கிரைய பத்திரத்தை தாவா வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒய்யம்மாள் கிரையம் வாங்கிய கிரைய சொத்தின் மதிப்பு என்ன என்றால் 1,50,000 ஆகும். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள அவையன் மனைவி சந்திரலேகா பெயரிலான பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் அவர் பெயரில் பட்டா இருந்த விவரம் எனக்கு தெரியாது, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. எனது மகன் அவையன் மாணிக்கம் என்பவரிடம் 2013 வருடம் ரூ. 8 லட்சம் கடனாக பெற்று இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் கண்ட நபர்கள் யாரேனா தெரிகிறதா என்றால் ஒரு புகைப்படத்தில் எனது மகன் அவையன் என்ற சின்னசாமியும் மற்றொரு புகைப்படத்தில் மாணிக்கம் என்பவரும் உள்ளனர். மேற்படி புகைப்படங்கள் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.2 ல் உள்ள பக்கம் 10ல் கண்ட புகைப்படத்தில் யார் உள்ளது என்றால் எனது மகன் அவையன் என்ற சின்னசாமி உள்ளார். மேற்படி புகைப்படம் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் நானும் எனது கணவரும் உள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 புகைப்படத்தில் உள்ள இரு சக்கர வாகனம் யாருடையது என்றால் எனது மகளுடையது ஆகும். பருத்திக்கு களை எடுப்பதற்காக மகள் வந்திருந்தார். எனது மகள் பெயர் வள்ளி. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தை யார் புகைப்படம் எடுத்தார் என்றால் புகைப்படக்காரரர் எடுத்தார் அவர் பெயர் தெரியாது. மேற்படி புகைப்படங்கள் காலை 09.30 மணியளவில் எடுக்கப்பட்டது. மேற்படி புகைப்படத்தில் கண்ட ஓட்டு வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி மின் இணைப்பு யார் பெயரில், எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 4 வருடத்திற்கு முன்பு எனது கணவர் பெயரில் ஏற்பட்டது. மேற்படி மின் இணைப்பிற்க்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை. பிவாசாஆ.8 புகைப்படத்தில் கண்ட தென்னை மரங்களில் விளைச்சல் இல்லாமல் உள்ளது என்றால் தேங்காய் வெட்டிய பிறகு விளைச்சல் இல்லாத நேரத்தில்

எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும். பிவாசாஆ8-ல் உள்ள புகைப்படம் ஒன்றில் பேப்பர்களை பரப்பி வைத்து உக்கார்ந்து இருக்கும் நபர் யார் என்றால் நான் தான். எனது மகன் அவையன் அவருடைய மனைவிக்கு தானா செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றை எழுதி வைத்து அதை தற்போது வரை ரத்து செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது மகன் அவையனும் அவரது மனைவி சந்திரலேகாவும் ஒன்றாக வசித்து வருகிறார்களா என்றால் அது எனக்கு தெரியாது. சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எழுத்து மூலம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பிவாசாஆ6 ஆவணமானது நாங்கள் கொடுத்த புகார் மனு அல்ல என்றால் எனது கணவரை கேட்டால் தான் தெரியும். வாசாஆ.1 ஆவணத்தில் எனது மகன் அவையன் சாட்சி கையெழுத்து செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய பத்திரம் பதிவு செய்யப்படாத காரணத்தால் தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கிரையதாரர் தாவா சொத்தை அசைன்மெண்டு மூலம் பெற்றதில் இருந்து 10 வருடத்திற்கு எனக்கு கிரையம் செய்திட அவருக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாததால் தாவா வழக்கு ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது கிரையதாரர்கள் தாவா சொத்தை எனக்கு வேண்டும் பொழுது பதிவு செய்து கிரையம் கொடுப்பதாக எழுதியுள்ளதால் தாவா சொத்தை நான் கிரையம் பெற்றதாக சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது கிரைய பத்திரம் பதிவு செய்யப்படாத காரணத்தினாலும் முத்திரை வில்லை கட்டணம் செலுத்தாத காரணத்தினாலும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கிரைய பத்திர வாசகமானது கிரைய உடன்படிக்கை வாசகம் போல் உள்ளதால் தாவா சொத்தை நான் கிரையம் பெற்றதாக சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தின் மூலமாக வாதிக்கு பாத்தியமான இடத்திற்கு நாங்கள் அக்கிரமமாக ஆக்கிரமித்து இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கு எதிர்கோரிக்கை படி எவ்வித பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.12 13:51:57 +0530